**செ.வெ. எண்: 482** **நாள்: 25.07.2011**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.7.2011) தலைமைச் செயலகத்தில், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஆகிய இரண்டு இடங்களில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) தொடங்கி வைத்தார்கள்.

தமிழகத்தைச் சார்ந்த மாணவச் செல்வங்கள், குறிப்பாக, கிராமப்புற மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த ஏழை, எளிய, நடுத்தர மாணவர்கள் அனைவரும் தங்கள் பகுதிகளிலேயே உயர்கல்வியைப் பெற வேண்டும், அதன் மூலமாக தமிழக மாணவ மாணவிகள் வளமான எதிர்காலத்தைப் பெற்று, வாழ்வில் உயர வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் லட்சியம் ஆகும்.

அவ்வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.7.2011 அன்று ஒன்பது பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கி வைத்தார்கள். மேலும், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஆகிய இரண்டு இடங்களில் தலா ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை இக்கல்வியாண்டிலேயே (2011–2012) திறக்கவும் அன்றே ஆணையிட்டார்கள்.

மேற்படி ஆணைக்கிணங்க, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை இன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்கி வைத்ததற்கு பாப்பிரெட்டிப்பட்டி பொதுமக்கள் சார்பாக பேரூராட்சி கவுன்சிலர் திரு.பி. ரவி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்கி வைத்ததை தொடர்ந்து, **அக்கல்லூரியில் பயிலும் மாணவி செல்வி மகாலட்சுமி நன்றி தெரிவித்து பேசியதாவது:–**

“மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வணக்கம். என் பெயர் மகாலட்சுமி. நான் பாப்பிரெட்டிப்பட்டியில் இருந்து வருகிறேன். நான் இந்த புது கல்லூரியில் B.A. (English) கோர்ஸ் எடுத்துள்ளேன். நானும் என்னுடைய நண்பர்களும் படிக்க வேண்டுமானால் நெடுந்தூரம் சென்று படிக்க வேண்டும். ஆனால் எங்கள் சொந்த ஊர் பாப்பிரெட்டிப்பட்டியில் கல்லூரி அமைத்து கொடுத்துள்ளீர்கள். அதனால் நாங்கள் இங்கே சேர்ந்து படிக்கிறோம் அம்மா. எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. எங்களுடைய நீண்ட நாள் கனவு நனவாக்கி தந்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றி.”

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டம், **பாப்பிரெட்டிப்பட்டியில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்கி வைத்து உரையாற்றியதாவது:–**

‘‘அனைவருக்கும் முதலில் எனது அன்பு கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பாப்பிரெட்டிப்பட்டியில் இன்று இந்த பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தருமபுரி மாவட்ட மக்களும் குறிப்பாக தருமபுரியிலுள்ள மாணவ, மாணவியர் இந்த கல்லூரியை நல்ல முறையில் பயன்படுத்தி கொண்டு வாழ்க்கையில் மேம்பாடடைய வேண்டும், அவர்களுடைய எதிர்காலம் பிரகாசமாக அமைய வேண்டும் என்ற எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன், நன்றி வணக்கம்.’’

மேலும், திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை இன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்கி வைத்ததை தொடர்ந்து, நன்னிலம் பொதுமக்கள் சார்பாக நன்னிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள் பேசியதாவது:—

“நான் வணங்குகின்ற தெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். நாற்று பறிக்கின்ற விவசாயிகள், நடவு நடுகின்ற தாய்மார்கள், தங்களுடைய பிள்ளைகள் எல்லாம் நன்னிலம் கல்லூரியிலேயே படிக்க போகிறார்கள் என்ற மகிழ்ச்சியுடன் அம்மா அவர்களை வணங்கி, வாழ்த்தி, பாராட்டி, நன்றி கூறிக் கொண்டிருக்கிறார்கள். நன்னிலம் தொகுதி மக்களோடு சேர்ந்து என்னுடைய கோடான கோடி நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.”

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்கி வைத்ததை தொடர்ந்து, **அக்கல்லூரியில் பயிலும் மாணவி செல்வி வித்யா நன்றி தெரிவித்து பேசியதாவது:—**

“மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வணக்கம். என்னுடைய பெற்றோர்கள் விவசாயத் தொழில் செய்கிறார்கள். நான் +2—வில் 963 மதிப்பெண் எடுத்துள்ளேன். எனக்கு தொலைத்தூரம் சென்று கல்லூரியில் படிக்கக் கூடிய வசதி கிடையாது. தற்போது, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் நன்னிலம் பகுதியின் சாதாரண ஏழை மக்களுடைய 50 ஆண்டுகால கனவுகளை நிறைவேற்றி பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கி இருப்பது நாங்கள் எல்லாம் மேற்கல்வி பெறுவதற்கு மிகப் பெரும் வாய்ப்பாக உள்ளது. அம்மாவின் பெண் கல்வி முன்னேற வேண்டும் என்ற லட்சியத்தை நாங்கள் இந்த கல்லூரியின் மூலம் நிறைவேற்றி வைப்போம். எங்களுக்கு இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்கள் கல்லூரியின் மாணவ, மாணவியரின் சார்பாக கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் அம்மா.”

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டம், **நன்னிலத்தில் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை துவக்கி வைத்து உரையாற்றியதாவது:—**

“அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். நன்னிலத்தில் இன்று அத்தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவு செய்து பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்ததில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாவட்டத்து மக்கள், திருவாரூர் மாவட்ட மக்கள் இந்த கல்லூரியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே கல்வி பயில உள்ள மாணவ, மாணவியர் அனைவருக்கும் மிக ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டுமென்ற எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு விடைபெற்று கொள்கிறேன், நன்றி, வணக்கம்.”

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் உயர்கல்வித் துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 25.7.2011